**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 89/2022 PW .3**

| | |
|---|---|
| பெயர் : பாண்டிசெல்வன் | தந்தை/கணவர் பெயர்: கருப்பையா |
| ஊர் : | தாலுகா : |
| வயது : | தொழில் : |
| ஜாதி : | சமயம் : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of18.03.2026

---

**(2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி ஆஜரில்லை. 1ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**<u>18.03.2026 முதல் விசாரணை:</u>**

1. நான் கீழவளவு ஊரில் குடியிருக்கிறேன். கட்டுமானத் தொழில் செய்கிறேன். அ.சா.1 எனது தம்பி ஆவார். அ.சா.2 எனது அப்பா ஆவார். வழக்கின் எதிரிகள் எனக்கு பழக்கமில்லை. கேதத்திற்கு வந்ததால் பின்னர் தான் தெரிந்து கொண்டேன். 25.12.2021ம் தேதி சிங்கம்புணரியில் என் ஆயாவின் கேதத்திற்கு வந்திருந்த போது சுடுகாட்டில் என் அப்பாவை, எதிரிகள் பேசி வாக்குவாதம் செய்தார்கள். அதை என் தம்பி கேட்க போனதால் அவரை அடித்து காயம்படுத்தியுள்ளார்கள். நான் என் தம்பியை அடித்த போது பார்க்கவில்லை. அதன் பிறகு சண்டை போடும் சத்தம்கேட்டு பார்த்தேன். என் தம்பிக்கு முகத்தில் பல இடங்களில் காயம் இருந்தது. அப்போது மாலை சுமார் 05.30 மணி இருக்கும். என் தம்பியை சிங்கம்புணரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு 2 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

2. எதிரியை இதற்கு முன்பாக நான் பார்த்தது இல்லை. மற்ற எதிரியையும் இதற்கு முன்பாக நான் பார்த்தது இல்லை. சாட்சி சூரியபிரகாஷ் எனது உறவினர் ஆவார். புகார்தாரர் எனது அப்பா என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.